குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# கெட்ட குமாரன்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Lazarus

தழுவியவர்: Ruth Klassen; Sarah S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.



தேவனுடைய மன்னிப்பை பற்றிச்
சொல்ல இயேசு ஆவலாயிருந்தார்.
ஆனால் இயேசு பாவிகளுடன்
சிநேகிதரராயிருக்கிறார் என்று யூதத்
தலைவர்கள் புகார் தெரிவித்தனர்.
ஆகையால் இயேசு பாவிகள்
தங்களுடைய பாவங்களுக்காக
மனஸ்தாபப்படும்போது மிகவும்
சந்தோஷமடைகிறார்
என்று விளக்க மூன்று
கதைகளைச்
சொன்னார்.


நூறு ஆடுகளை
உடைய மனிதனைக்
குறித்து முதல் கதை.
ஒரு ஆடு
காணாமற்போயிற்று.



உடனே
தொன்னிற்றொன்பது
ஆடுகளை
விட்டுவிட்டு
தொலைந்து

போன ஒரு ஆடைத்
தேடிச் சென்றான்.



அந்த மேய்ப்பன் ஆட்டைக்
கண்டுபிடிக்கும் வரை
தேடித்தேடி அலைந்தான்.
அந்த ஆட்டை தன்
தோளில் போட்டுக்கொண்டு
சந்தோஷமாக வீட்டிற்கு
சுமந்து சென்றான்.
"என்னோடு
சந்தோஷப்படுங்கள்,

காணாமற்போன என்
ஆட்டை கண்டுபிடித்தேன்,"
என்று தன் நண்பர்களிடம்
கூறினான்.

மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம்
பரலோகத்தில் மிகுந்த
சந்தோஷமுண்டாயிருக்கும்
என்று இயேசு விளக்கினார்.
மனந்திரும்புவது
என்றால் நம்முடைய
பாவங்களுக்காக
துக்கப்படுவதாகும்
- அதைவிட்டு
விலகிவிட
துக்கப்பட
வேண்டும்!





இயேசுவின்
அடுத்த கதை. பத்து
வெள்ளிக்காசையுடைய
ஒரு பெண்ணைப்
பற்றியது, ஒருவேளை
அது அவளுடைய
வாழ்நாள்
சேமிப்பாகயிருக்கலாம்.
ஒரு பரிதாபமான
காரியம் நடந்தது.
அவள் ஒரு காசை
துலைத்துவிட்டாள்.

பெருக்கு!  பெருக்கு!
பெருக்கு! அந்தப் பெண் எல்லா
இடங்களிலும் தேடினாள்.



இறுதியாக அவள் அந்தக் காசை கண்டுபிடித்தாள். அவள் மிகுந்த சந்தோஷம் அடைந்தாள். அவள் என்ன செய்தாள் என்று யூகிக்க முடியுமா? ஆமாம், அவள் தன்னுடைய சிநேகிதர் எல்லாரிடத்திலும் சொன்னாள்!





திரும்பவும்
இயேசு சொன்னார்,
"மனந்திரும்புகிற
ஒரு பாவியினிமித்தம்
தேவதூதர் சமுகத்திலே
சந்தோஷம்
உண்டாகிறது."

இயேசு சொன்ன மூன்றாவது
கதைதான் துக்ககரமானது.
தன்னுடைய தந்தையின்
வீட்டை விட்டுச்சென்ற
ஒரு பையனின்
கதை.



தூர தேசத்திலே முட்டாள்தனமாக தன்னுடைய பணத்தை அந்தப் பையன் செலவு செய்தான்.  இப்போது அவன் என்ன செய்வான்?  மிகவும் மோசமான, ஒரு பஞ்சம் ஏற்பட்டது. பசியினாலே அந்தப் பையன் சாகக்கிடந்தான்.



பசியை தாங்க முடியாத வேளையிலே, பன்றிக்கு தீவனம் கொடுக்கும் வேலை அவனுக்கு கிடைத்தது. ஆனால் யாரும் உணவு கொடுக்கவில்லை. பன்றியின் தீவனத்தை சந்தோஷமாக சாப்பிட அவன் நினைத்தான்.



ஒருவேளை அவன் சாப்பிட்டிருக்கக் கூடும்! கடைசியாக அந்தப் பையனுக்கு தெளிவு வந்தது. "என்னுடைய வீட்டிலோ, வேலைக்காரர்கள் நன்றாக சாப்பிடுகிறார்கள்," என்று யோசித்தான்.





"நான் என் வீட்டிற்குப் போய் என்னுடைய தகப்பனிடம் பாவத்திற்கு மன்னிப்பு கேட்பேன். நான் அவருடைய குமாரனாக இருக்க தகுதியில்லை. ஒருவேளை தன்னுடைய வேலைக்காரனாக என்னை கூலிக்கு அமர்த்துவார்."

அவனுடைய வீட்டிலிருந்து அவன் தூரத்தில் வருகையில், அவன் தகப்பனார் அவன் வருவதைக் கண்டார். சந்தோஷமாக திரும்பி வருகிற தன் மகனை நோக்கி தகப்பன் ஓடினார்.

அவர் பையனுக்கு முத்தம் கொடுத்து கட்டி அணைத்தார்.





"தகப்பனே, நான் பாவம் செய்தேன். நான் உம்முடைய குமாரனாக இருப்பதற்கு தகுதியில்லாதவன்." அந்தப் பையன் தன்னை ஒரு கூலிக்காரனாக ஏற்றுக்கொள்ளும்படி தன் தகப்பனிடத்தில் கேட்க விரும்பினான். ஆனால் தகப்பனோ குறுக்கிட்டான்.



"உயர்ந்த வஸ்திரங்கள்,
பாதரட்சைகள், மற்றும்
ஒரு மோதிரத்தை
என்னுடைய குமாரனுக்கு
கொண்டுவாருங்கள்.
மற்றும் ஒரு பெரிய
விருந்துக்கு ஆயத்தம்
செய்யுங்கள்."

அங்கு ஒரு வியப்புக்குரிய விருந்து ஏனெனில் காணாமற்போன மகன் கண்டுபிடிக்கப்பட்டான். பாவத்திலிருந்து மனந்திரும்பி தன்னிடத்தில் வருகிறவர்களை தேவன் எவ்வளவாக அன்புடன் ஏற்றுக் கொள்கிறார் என்பதை தெரிவிக்க இயேசு இந்தக் கதையைச் சொன்னார்.



கெட்ட குமாரன்

தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

லூக்கா 15

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16